www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 028

16 ஒகஸ்ட் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# வாளேந்திய சிங்கக் கொடியை பிரித்தானிய தமிழர் பேரவைக்குள் புகுத்துவதற்கு டொக்டர் இந்து முயற்சி




பிரித்தானிய தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினரும், பேச்சாளருமாக விளங்கும் சிங்கள அரசின் கைக்கூலியான டொக்டர் இந்து, பேரவைக் குள் சிங்கக் கொடியைப் புகுத்துவதற் கான சூழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

தமிழீழ தேசியக் கொடியாகிய புலிக்கொடியை பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்கு காகிதப்புலித் தொழிலதிபர் தனம் விதித்த தடையை அமுல்படுத்தி வரும் டொக்டர் இந்து, சிங்கள தேசியக் கொடியாகிய வாளேந்திய சிங்கக் கொடியைப் பயன்படுத்துமாறு பேரவையின் உறுப்பினர்களை வலியுறுத்தி வருகின்றார்.

பிரித்தானியாவில் இருந்து ஜெனீவா நோக்கிப் புறப்படும் பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் டொக்டர் இந்து, தமிழீழ தேசியக் கொடி யைக் கொண்டு செல்ல வேண்டாம் என்று அவர்களை நிர்ப்பந்தித்து வருகின்றார். கோத்தபாய - கே.பி தரப்பி னரை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மிகவும் இரகசியமாக கொழும்பில் சந்தித்து விட்டு, பின்னர் தனது தூதுவர்களை கொழும்புக்கு அனுப்பிய டொக்டர் புவியின் நெருங்கிய தோழியாக டொக்டர் இந்து விளங்குகின்றார்.

இதற்கிடையே, தமிழீழ தேசியக் கொடியை ஜெனீவாவிற்கு கொண்டு செல்ல முற்பட்ட பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் சிலரை டொக்டர் இந்து மிரட்டிய பொழுது கறுப்பின் புலனாய்வுப் பிரிவினரால் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு இத்துடன்




இணைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழீழ தேசியக் கொடியை பயன்படுத்துவதற்கு தடை விதித்து காகிதப்புலித் தொழிலதிபர் தனம் வெளியிட்ட ஒலிப்பதிவு அறிக்கையை போன்று, தற்பொழுது டொக்டர் இந்து வெளியிட்ட கருத்துக்களும் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.



**“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”**

www.tamilarangam.net



# ஐந்து இலட்சம் பவுண் தேசியப் பணத்தை திருடிய நரிகேசியின் அடிதடி அமைச்சர் சேகர்!

கடைந்தெடுத்த தேசத்துரோகி கே.பியால் தொடங்கப்பட்ட நாடுகடந்த அரசாங்கக் கும்பலின் முடிசூடான மன்னனான நரிகேசி உருத்திரகு மாரனின் அடிதடி அமைச்சர் உருத்திராபதி சேகர், ஐந்து இலட்சம் பவுண் தேசியப் பணத்தை சூறையா டியமை தொடர்பான நம்பகமான தகவல்கள் கறுப்புக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

1980களில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பிரித்தா னிய கிளையின் பொறுப்பாளராக விளங் கியவர் உருத்திராபதி சேகர். மூன்று மாவீரர்களின் சகோதரன் என்ற வகை யில், தானே தமிழீழ விடுதலைப் புலிக ளின் பிரித்தானிய கிளைப் பொறுப்பாளர் என்று பிரகடனம் செய்து கொண்ட இவர், அப்போதைய காலகட்டத்தில் பிரித்தானியாவில் அரசியல் வேலைகளில் ஈடுபட்ட தமிழர் மறுமலர்ச்சிச் சங்கம் என்ற அமைப்பின் பொறுப்பாளராக இருந்த சீவரட்ணம் அவர்களுக்குப் போட்டியாக பிரித்தானியாவில் குழப் பத்தை விளைவித்து வந்தார். இதன் பின்னர் 1989ஆம் ஆண்டின் இறுதியில் இலண்டனை வந்தடைந்த கேணல் கிட்டு அவர்கள், சேகர் தலைமையில் இயங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பிரித்தானிய கிளையையும், தமிழர் மறுமலர்ச்சிச் சங்கம் என்ற அமைப்பையும் கலைத்தார். அதேநேரத்தில் அந்தக் காலப்பகுதியில் கிழக்கு இலண்டன் ஈஸ்ற்ஹாம் பகுதியிலும், மேற்கு இலண்டன் கென்ரன் பகுதியிலும், இயக்கப் பணத்தில் இரண்டு வீடுகளை உருத்திராபதி சேகர் கொள்வனவு செய்திருந்தார். சேகரின் இந்த சொத்துக் கொள்வனவுக்கு உடந்தையாக இருந்தவர் அவரது மைத்துனரான ஜெயம்.

பிரித்தானியாவை கேணல் கிட்டு வந்தடைந்ததும், தன்னையே பிரித்தானிய கிளைப் பொறுப்பாளராக நியமிப்பார் என்று சேகர் கனவு கண்டார். ஆனால் அது பலிக்கவேயில்லை. இருந்த பொழுதும், சேகரின் பெயரில் ஈஸ்ற்ஹாம் பகுதியில் இருந்த தேசியச் சொத்தான வீடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக செயலகமாக பதிவு செய்யப்பட்டு, 2001ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரித்தா னியாவில் அமுல்படுத்தப்படும் வரை அங்கு இயங்கி வந்தது. மூன்று மாவீரனின் சகோதரன் என்ற நம்பிக் கையின் அடிப்படையில், அந்த வீட்டின் உரிமம் சேகரின் பெயரில் இருந்து பின்னரும் மாற்றப்படவில்லை. இதே நேரத்தில் சேகரின் மைத்துனன் ஜெயத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்த கென்ரன் வீடு, 2000ஆம் ஆண்டு உரிய முறையில் தேசியச் சொத்தாக் கப்பட்டது. எனினும் கேணல் கிட்டு அவர்களின் வதிவிடம் என்ற வகையில், ஈஸ்ற்ஹாமில் இருந்த வீடு விற்கப்படுவதை தேசியப் பணியாளர்கள் தவிர்த்திருந்தனர்.

இருந்த பொழுதும், மே 18இற்குப் பின்னர் கேட்பதற்கு ஆட்கள் எவரும் இல்லை என்ற துணிவில், தேசியச் சொத்தான ஈஸ்ற்ஹாம் வீட்டை கையகப்படுத்திக் கொண்ட சேகர், தற் பொழுது அதனை விற்பனை செய்து ஐந்து இலட்சம் பவுண்களை சூறையாடி யிருப்பதாக தெரிய வருகின்றது.

கே.பியின் வெளிநாட்டு ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராக விளங்கும் வி(நாய்)யகத்தின் ஆலோச னைக்கு அமைய, நரிகேசி உருத்திரகு மாரனின் நாடுகடந்த அரசாங்கத்தில் வாக்குமோசடி ஊடாக இணைத்துக் கொள்ளப்பட்ட சேகர், தற்பொழுது நாடு கடந்த அரசாங்கத்தின் அடிதடி அமைச்சராக இயங்குகின்றார். இவருக்கு உடந்தையாக, கள்ள மட்டை ராஜன், பைலட் ஞானம், பொலிஸ் பாஸ்கர் போன்ற தேசத் துரோகிகள் செயற்படுகின்றனர்.

இதற்கிடையே, தேசியச் சொத்தை சேகர் சூறையாடத் திட்ட மிட்டிருந்தது தொடர்பாகக் கேள்வியுற்ற தொழிலதிபர் தனம், அதில் பங்கு கேட்க முற்பட்ட பொழுது, சேகரால் கடுமை யாக மிரட்டப்பட்டதாக தெரிய வரு கின்றது. இதனால் கதிகலங்கிப் போன தொழிலதிபர் தனம், கண்ணீர் விட்டு அழுததாகவும் கறுப்பிற்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

ஏற்கனவே, பிரித்தானியாவை விட்டு கேணல் கிட்டு அவர்கள் வெளியேறியதும், தனத்திற்கும், சேகரிற் கும் இடையில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியில், சேகரை தனத்தின் நண் பரான சிங்கள அரசின் டபிள் ஏஜன்ட் சின்னச்சாந்தன் (கந்தவனம் சாந்த குமார்) அடித்து உதைத்திருந்தார்.

1997ஆம் ஆண்டில் இருந்து கம்போடியாவில் கே.பியுடன் நெருக்கமாக செயற்பட்ட டபிள் ஏஜன்ற் சின்னச்சாந்தன், பின்னர் தொழிலதிபர் தனம், பெருங்குடிமகன் சர்வே போன்றோரின் உதவியுடன் பிரித்தானி யாவை மீண்டும் வந்தடைந்து, தமிழ்த் தேசியப் பணியாளர்களிடையே குழப் பத்தை ஏற்படுத்திய பின்னர், தமிழர் வீட்டு வாடகைக் கழகம் என்ற அமைப்பை, தேசவிரோதி மனோவின் நெருங்கிய நண்பர் ஒருவரிடம் கையளித்து தனது மனைவியை எழுபத்தெட்டாயிரம் பவுண்கள் சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தியி ருந்தமை நினைவூட்டத்தக்கது.

## பிரித்தானியாவில் உள்ள தமிழீழ தேசிய சொத்து விபரம் வெளியிடப்படும்

தனத்தின் பெயரில் உள்ள தேசிய சொத்துக்கள் தொடர்பான விபரங்களை கரன் என்பவர் எமக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ளார். கரனுக்கு இம்மின்னஞ்சலை தனத்துடன் பணிபுரி யும் ஒருவர் முன்னர் அனுப்பி வைத்திருந்தார். அம்மின்னஞ்சலை கரன் எமக்கு அப்படியே திருப்பி அனுப்பி வைத்துள்ளார். எதிர்வரும் வாரங்களில் சொத்து விபரங்கள் முழுமையான தரவுகளுடன் வெளியிடுவோம். இறுதியில் மின்னஞ்சலை இலண்டனில் இருந்து அனுப்பியவர் விபரமும் வெளியிடப்படும்.